சொல்கிறேன். எனவே, இரண்டு கட்சிகளும் சேர்ந்து, இந்த வர்ணனைகளைச் செய்யாமல் இருந்தாலே பல மணி நேரங்கள் நமக்கு மீதமாக இருக்கும். அதையாவது செய்யுங்கள். இரண்டில் ஏதாவது ஒன்றைச் செய்யுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி நேரத்தைப் பொறுத்தவரையில், நீங்கள் சொல்கின்ற ஆலோசனைகளையெல்லாம் நான் கேட்பதற்குத் தயாராக இருக்கிறேன். ஆனால், நிறைய உறுப்பினர்கள் புதிதாக வந்திருக்கிறார்கள். ஆர்வமாக இருக்கிறார்கள். பேசுவதற்கு வாய்ப்பு இல்லை என்று கேட்பதனால்தான், நாம் துணைக் கேள்விகளை (குறுக்கீடு) இல்லை, ஆஸ்டின் மாதிரி பழைய உறுப்பினர்களெல்லாம் அதிக வாய்ப்பை எதிர்பார்க்காதீர்கள். வந்திருக்கின்ற புதிய உறுப்பினர்களுக்குத்தான் நான் நிறைய வாய்ப்பைக் கொடுத்துக் கொண்டிருக்கிறேன். எனவே, துணைக் கேள்வியும் அந்த அடிப்படையில்தான் வருகிறது. ஆகவே, கேள்வி கேட்கின்ற உறுப்பினர்கள் தங்களுடைய நேரத்தை குறைத்து, கேள்வியைச் சுருக்கமாகக் கேட்டால், மற்ற உறுப்பினர்களுக்கும் வாய்ப்பு அளிக்கப்படும். கேள்வி நேரமும் நீடிக்காது. ஆகவே, அந்த முறையை அனைவரும் பின்பற்றி, இன்றைக்கு எதிர்க்கட்சித் துணைத் தலைவரும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் சொல்லியிருக்கின்ற ஆலோசனைகளை ஏற்று, நீங்கள் அனைவரும் பின்பற்றி எனக்கு ஒத்துழைக்கும்படி அன்போடு கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

2. தகவல் கோரல்—தொடர்ச்சி

(இ) மத்திய அரசின் 'ஒரே நாடு, ஒரே குடும்ப அட்டை' திட்டம் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வேலு, என்னவென்று சொல்லுங்கள்.

***திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'ஒரே நாடு, ஒரே குடும்ப அட்டை' என்கின்ற ஒரு திட்டத்தை மத்திய அரசு கொண்டு வருவதாக இரண்டு தினங்களாக பத்திரிகையிலே செய்திகள் வருகின்றன. அதுசம்பந்தமாக, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக இந்த அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வர நான் விரும்புகிறேன்.

மத்திய உணவுத் துறை அமைச்சர் திரு. ராம்விலாஸ் பாஸ்வான் அவர்கள் 27–6–2019 அன்று மாநில உணவுத் துறைச்

2019 ஜூலை 2] [திரு. எ.வ. வேலு]

செயலாளர்களை அழைத்து, 'ஒரே நாடு, ஒரே குடும்ப அட்டை' என்ற திட்டத்தைச் செயல்படுத்துவது குறித்து அறிவித்திருக்கிறார். இதன்மூலம் ஒருவர் எந்த மாநிலத்தில் இருந்தாலும், எந்த நியாய விலைக் கடைகளிலும் அத்தியாவசியப் பொருட்களைப் பெற்றுக் கொள்ளலாம் என்றும், இடம் பெயர்பவர்களுக்கு இந்தத் திட்டம் உதவியாக இருக்கும் என்றும் அவர் தெரிவித்திருக்கிறார். மாநிலத்திற்கு மாநிலம் உணவு முறையும், வழங்கலும் மாறுபடுகிறது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், டெல்லியிலே அரிசி 10 கிலோ, கோதுமை 25 கிலோ, சர்க்கரையே இல்லை என்ற நிலை இருக்கிறது. மஹாராஷ்டிராவை எடுத்துக்கொண்டால், 35 கிலோ அரிசியும், ஒரு நபருக்கு 500 கிராம் சர்க்கரையும் என்ற நிலை இருக்கிறது. மேற்கு வங்காளத்தை எடுத்துக்கொண்டால், 15 கிலோ அரிசி, 20 கிலோ கோதுமை, ஒரு நபருக்கு 125 கிராம் சர்க்கரை என்ற நிலையிருக்கிறது. உத்திரப்பிரதேசத்தை எடுத்துக்கொண்டால், 20 கிலோ அரிசி, 15 கிலோ கோதுமை, ஒரு நபருக்கு 700 கிராம் சர்க்கரை என்ற நிலையிருக்கிறது. பக்கத்தில் இருக்கின்ற தெலுங்கானாவிலே 35 கிலோ அரிசி மட்டும்தான் வழங்கப்படுகிறது. சர்க்கரையும், கோதுமையும் கிடையாது என்ற நிலை அந்த மாநிலத்தில் இருக்கிறது. தமிழ்நாட்டைப் பொறுத்தளவுக்கு, நீண்ட நெடிய காலமாக நாங்கள் ஆண்டு கொண்டிருந்தபோதும் சரி, இப்போது நீங்கள் ஆண்டு கொண்டிருக்கின்றபோதும் சரி இலவசமாக 20 கிலோ அரிசியை கொடுத்துக் கொண்டிருக்கின்றோம். தேவைப்பட்டால் 3 கிலோ கோதுமை, 17 கிலோ அரிசி என்றுகூட மாற்றிக் கொடுக்கப்படுகிறது. சர்க்கரையை பொறுத்தளவிற்கு 500 கிராம் ஒரு நபருக்கு என்ற நிலையிலே இந்த அரசாங்கம் கொடுத்துக் கொண்டிருக்கிறது. பிற மாநிலங்களிலே அரிசி, கோதுமை ஆகியவற்றை பணம் கொடுத்து பொது விநியோகக் கடைகளிலே வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், இந்த அரசாங்கம் இலவசமாக 20 கிலோ அரிசியை வழங்குகிறது என்ற நிலை இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது. தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சியிலே இருந்தபோது பொது விநியோகத் திட்டத்தோடு Special PDS-சிறப்புப் பொது விநியோகத் திட்டத்தை தொடங்கினோம். அதன் மூலமாக குடும்பப் பொருளாதாரம் வளரும், விலைவாசியைக் கட்டுப்படுத்த முடியுமென்று 14–4–2007–லே அந்தத் திட்டத்தை துவக்கினோம். தொடர்ந்து துவரம் பருப்பு ஒரு கிலோ 30 ரூபாய், உளுத்தம் பருப்பு ஒரு கிலோ 30 ரூபாய், பாமாயில் ரூ.25, கோதுமை மாவு 11 ரூபாய் என்ற அடிப்படையிலே அந்த சிறப்புப் பொது விநியோகத்

திட்டத்தை நடத்தினோம். தொடர்ந்து அது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. (குறுக்கீடு) கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் இருங்கள். (குறுக்கீடு) நீங்கள் கடைசியாகப் பேசுங்கள். (குறுக்கீடு) நீங்கள் சொல்லுங்கள். (குறுக்கீடு) நான் குற்றச்சாட்டு எதுவும் சொல்லவில்லை. (குறுக்கீடு) நான் பேசி முடித்தவுடன் பதில் சொல்லுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் பேசி முடித்தவுடன், நீங்கள் பதில் சொல்லுங்கள்.*

திரு. எ.வ. வேலு: நான் பேசி முடித்தவுடன் பதில் சொல்லுங்கள். (குறுக்கீடு) ஆக, இதற்கு அரசாங்கம். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், சுருக்கமாகப் பேசி முடியுங்கள்.*

திரு. எ.வ. வேலு: சொல்கிறேன். எனக்கு, உங்களுக்கு, அமைச்சருக்கு என்று 234 தொகுதிகளுக்காகவும் இதைப் பேசிக் கொண்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அனைவருக்கும் சேர்த்து விரைவில் பேசி முடியுங்கள்.*

பிற்பகல் 12–20

திரு. எ.வ. வேலு: ஆண்டுக்கு கூடுதலாக 470 கோடி ரூபாயை இதற்காக அரசு ஒதுக்கியது. ஆனால், இன்றைக்கு உணவுப் பாதுகாப்புச் சட்டம் என்ற இந்தத் திட்டத்தை அரசு வரவேற்ற காரணத்தினால், நகரப் பகுதிகளிலே 50 சதவிகித cards–க்கும், கிராமங்களிலே 75 சதவிகித cards–க்கும்தான் இனி உணவுப் பொருள் வழங்க முடியும் என்ற நிலையிருக்கிறது. அதனால், அரசாங்கத்திற்கு கூடுதலாக பணச் சுமை ஏற்படுவதற்கும் வாய்ப்பு இருக்கிறது.

நான் ஒரு செய்தியைச் சொல்ல விரும்புகிறேன். நாங்கள் ஆண்டு கொண்டிருந்தபோது இதுகுறித்து கடிதம் வந்தது. அப்போது தலைவர் கலைஞர் அவர்கள், உணவு பாதுகாப்புச் சட்டம் தேவையில்லை என்று மறுத்து எழுதினார்கள், அதைத் தொடர்ந்து, 2011–ல் அம்மையார் ஆட்சிக்கு வந்த பிறகும்கூட, 20–12–2011–ல், மாண்புமிகு பிரதமராக திரு. மன்மோகன் சிங் இருந்த காலத்திலும் இதுகுறித்து கடிதம் எழுதினார்கள். அதைத்

தொடர்ந்து அம்மையார் அவர்கள் 3–6–2014, 7–8–2014 மற்றும் 29–12–2014 ஆகிய தேதிகளில் மாண்புமிகு பிரதமர் திரு. மோடி அவர்களுக்கு கடிதம் எழுதினார்கள். மாநில அரசினுடைய அதிகாரத்தை ஆக்கிரமிக்கிற வகையில், மத்திய அரசாங்கம் செயல்படக் கூடாது என்று முதலமைச்சர் அம்மையார் அவர்களே டெல்லிக்குக் கடிதம் எழுதினார்கள். ஏனென்று சொன்னால், மாநிலத்தினுடைய அதிகாரத்தைப் பறித்துக்கொள்ளக் கூடாது என்கிற நிலையிலே அதை எழுதினார்கள்.

அப்படிப்பட்ட நிலையில், தமிழ்நாட்டிலே இன்றைக்கு இந்தத் திட்டத்தை நிறைவேற்றினால் அரசாங்கத்திற்கு கூடுதலாக பணச் சுமை ஏற்படும். குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், தமிழ்நாட்டில் 1 கோடியே 99 இலட்சத்து 53 ஆயிரத்து 681 கார்டுகள் இருக்கின்றன. அரசாங்கத்திற்கு இப்போது 3.23 இலட்சம் டன் அரிசி தேவைப்படுகிறது. மத்திய அரசாங்கம் 2 இலட்சத்து 96 ஆயிரம் டன்தான் தருகிறது. இதனால் இந்த அரசாங்கத்திற்கு மாதாமாதம் 27 டன் deficit வருகிறது. மொத்தத்தையும் எடுத்துக்கொண்டோம் என்று சொன்னால். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கார்டு சம்பந்தமாக பேசுங்கள்.

திரு. எ.வ. வேலு: நான் எல்லாவற்றையும் சேர்த்துச் சொல்கிறேன். ஓர் ஆண்டுக்கு எடுத்துக்கொண்டால், கிட்டத்தட்ட மூன்று இலட்சத்து 24 ஆயிரம் டன் அரிசி இந்த அரசாங்கத்திற்குத் தேவைப்படுகிறது. 3 ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி கொடுக்கிறார்கள். ஆனால், நீங்கள் பற்றாக்குறைக்கு இன்றைக்கு 1 கிலோ அரிசியை 28 ரூபாய் என வெளி மார்க்கெட்டில் வாங்குகிறீர்கள். வெளி மாநிலத்திலிருந்து இன்றைக்கு தமிழ்நாட்டிற்கு வந்திருப்பவர்கள் பல பேர் இருக்கிறார்கள். பீகார் மற்றும் உத்தரப்பிரதேசத்திலிருந்து வருபவர்கள் எல்லாம் இருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் கார்டு கொடுக்கின்றபோது, தமிழ்நாட்டில் குடியிருக்கும் ஏற்கெனவே இருக்கின்ற அட்டைதாரர்களுக்கு உரிய நேரத்திலே உணவுப் பொருள் வழங்குவதற்கு வாய்ப்பே இல்லை. அரசாங்கத்திற்குக் கூடுதலாக பணச் சுமை ஏற்படும். இன்னும் சொல்லப்போனால், தமிழ்நாட்டில் பிறப்பு விகிதத்தை மற்ற மாநிலங்களையும்விட குறைத்து வைத்திருக்கிறோம். வட இந்தியர்களெல்லாம் இங்கு வந்ததால்தான் மக்கள் தொகை கூடுகிறது. அவர்களுக்கும் குடும்ப அட்டைகள் வழங்கினால் அரசாங்கத்திற்கு இன்னும் அதிகமான

பணச் சுமை வருவதற்கு வாய்ப்பிருக்கிறது. இந்த 'ஒரே நாடு, ஒரே ரேஷன் கார்டு' என்பதன்மூலம் வட இந்தியாவில் இருக்கிற இந்தி பேசுபவர்களையெல்லாம் தமிழ்நாட்டிலே கொண்டுவந்து புகுத்தி, இந்தி பேசுகிற மாநிலமாகக்கூட தமிழ்நாட்டை மாற்றுவதற்கு வாய்ப்பிருக்கிறது.

தமிழ்நாடு போன்ற வளர்ந்த மாநிலங்களிலே, இந்திக்காரர்களைக் குடியேற்றி நம்முடைய சலுகைகளையெல்லாம் அவர்களிடம் பறி கொடுப்பது என்பது ஏற்றுக்கொள்வதாக இல்லை. இது அரசியல் சட்டத்தையே குழி தோண்டி புதைக்கின்ற ஒரு நிலையை உருவாக்கிவிடுமோ என்கிற ஐயம் ஏற்படுகிறது. கூட்டாட்சித் தத்துவத்திற்கு இது உலை வைக்குமோ என்கிற ஐயமும் ஏற்படுகிறது. மாநில சுயாட்சிக்கு வேட்டு வைக்கின்ற நிலை ஏற்பட்டுவிடுமோ என்ற ஐயம் இருக்கிறது. இது ஒரே நாடு, ஒரே தேர்தல்; ஒரே நாடு, ஒரே கல்வி; ஒரே நாடு, ஒரே சுகாதாரக் கொள்கை; ஒரே நாடு, ஒரே நுழைவுத் தேர்வு; ஒரே நாடு, ஒரே வரி என்ற அடிப்படையிலே, இந்த 'ஒரே நாடு, ஒரே ரேஷன் கார்டு' திட்டம் வந்தால், மாநில அரசாங்கத்திற்கும் கடன் ஏற்பட்டுவிடும். நம்மால் பணமும் ஒதுக்க முடியாது. ஏனென்று சொன்னால், ஏற்கெனவே கிட்டத்தட்ட 3 இலட்சத்து 99 ஆயிரம் கோடி ரூபாய் அரசாங்கத்திற்குக் கடன் இருக்கிறது. நிதியமைச்சர் பார்க்கிறார்; இந்த ஆண்டுகூட 19 ஆயிரம் கோடி ரூபாய் deficit இருக்கிறது. பிற மாநிலத்திலிருந்து வந்தவர்களுக்கும் கார்டு கொடுத்தீர்களென்று சொன்னால், நாட்டில் பொது விநியோகக் கடையில் எங்கும் பொருட்கள் கிடைக்காது. எனவே, அரசு உடனே மத்திய அரசிடம் சொல்லி இந்தத் திட்டத்தை நிறுத்துங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு, உரையை முடியுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) அரசினுடைய கவனத்தை ஈர்ப்பதற்கு உங்களுக்கு வாய்ப்புக் கொடுத்தால், இவ்வளவு நேரமா பேசுவீர்கள்? (குறுக்கீடுகள்) திரு. வேலு, நீங்கள் நன்றாகப் பேசினீர்கள். உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்தை நன்றாக ஈர்த்துவிட்டீர்கள். உட்காருங்கள். (குறுக்கீடு)

***மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள். . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு, போதும், உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு, உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை, போதும் உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், முன்னாள் உணவுத் துறை அமைச்சராக இருந்தவர். மத்திய அரசு செயல்படுத்த விழையும் 'ஒரே நாடு, ஒரே ரேஷன் கார்டு' என்கிற இந்தத் திட்டம் குறித்து அவர் ஒரு சிறப்புக் கவன ஈர்ப்பு தீர்மானத்தின்மூலம் அவையினுடைய கவனத்தை ஈர்த்திருக்கிறார். அதுசம்பந்தப்பட்ட சில கருத்துகளை அவையின் முன்னாலே நான் வைக்க விரும்புகிறேன். ஒருங்கிணைந்த பொது விநியோக மேலாண்மைத் திட்டத்தை, அதாவது,* Integrated Management of Public Distribution System (IMPDS) *என்ற இந்தத் திட்டத்தினை நடைமுறைப்படுத்த மத்திய அரசு 5–4–2018 அன்று ஒரு சுற்றறிக்கையை மாநிலங்களுக்கு அனுப்பி வைத்தது.*

பிற்பகல் 12–25

அதைத் தொடர்ந்து நாடு முழுவதும் எங்கு வேண்டுமானாலும், குடும்ப அட்டை வைத்திருப்போர் நியாய விலைக் கடைகள்மூலம் உணவு தானியங்கள் பெறுவதற்கான திட்டத்தை அமல்படுத்துதல்; தேசிய அளவிலான தகவல் தொகுப்பு ஒருங்கிணைப்புமூலம் பயனாளிகள் இரண்டு குடும்ப அட்டைகள் வைத்திருப்பதைத் தடுத்தல்; மாநில பொது விநியோகத் திட்ட அமைப்பு முறையை மத்திய பொது விநியோகத் திட்ட அமைப்பு முறையோடு ஒருங்கிணைத்து குடும்ப அட்டை மேலாண்மை, உணவு தானிய ஒதுக்கீடு மற்றும் விநியோக அமைப்பு முறை ஆகிய பணிகளைச் செய்வதற்கு ஒருங்கிணைந்த தகவல் தொகுப்பு உட்கட்டமைப்பினை ஏற்படுத்துதல்; மேலும், மேம்பட்ட தகவல் பகுப்பாய்வு தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்தி மத்திய தகவல் தொகுப்புடன் சேர்த்து பொது விநியோகத் திட்டத்தில் தொடர் மேம்பாட்டினை ஏற்படுத்திட வழிவகை செய்தல்; நுகர்வோருக்கு எளிதான பொது விநியோக திட்டச் செயல்பாடுகளை மேம்பட்ட வலைதளம் மற்றும் கைபேசி சேவைகள்மூலம் உருவாக்குதல்; தகவல் பாதுகாப்பு மற்றும் அதன் தரத்தை மேம்படுத்தி, மாநிலங்களுக்கு உதவுதல்; ஏழாவதாக, சிறந்த நடைமுறைகளை மாநிலங்களுக்கிடையே

பகிர்ந்துகொள்ளுதல் ஆகிய கூறுகளை உள்ளடக்கி, 2–11–2018 அன்று வரைவு புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றை மத்திய அரசு அனுப்பி வைத்தது. இதற்கிடையில், பெரும்பாலான மாநிலங்கள் ஆதார் எண்ணை அடிப்படையாகக் கொண்டு, தகவல் தரவு ஏற்படுத்தியதாலும், நியாய விலைக் கடைகளில் விற்பனை இயந்திரம்மூலம் பொருட்கள் வழங்கப்படுவதாலும் ஒரு குடும்ப அட்டைதாரர் அந்தந்த மாநிலத்திலுள்ள ஒவ்வொரு நியாய விலைக் கடையிலும் தனக்குரிய அத்தியாவசியப் பொருட்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்கிற வகையிலே Intra State Portability என்கிற திட்டத்தினைச் செயல்படுத்த மத்திய அரசு முடிவு செய்து, அதற்கான அறிவுரைகளை மாநில அரசுக்கு 14–5–2019 அன்று அனுப்பி வைத்தது. இதன் தொடர்ச்சியாகத்தான் 28–6–2019 அன்று மாண்புமிகு மத்திய உணவுத் துறை அமைச்சர் அவர்கள் 'ஒரே நாடு; ஒரே குடும்ப அட்டை' என்ற திட்டத்தினை அறிமுகம் செய்யப் போவதாக அறிவித்தார்கள். இதன்மூலம் முன்னுரிமை பெற்ற குடும்ப அட்டைதாரர்கள் அதாவது, priority card holders மற்றும் 'Antyodaya Anna Yojana' குடும்ப அட்டைதாரர்கள் தங்களுடைய அத்தியாவசியப் பொருட்களை இந்தியாவில் உள்ள எந்த நியாய விலைக் கடையிலும் பெற்றுக்கொள்ளலாம் எனவும், இதன் முதற்கட்டமாக, ஆந்திரா, தெலங்கானா ஆகிய மாநிலங்களில் பரீட்சார்த்தமாக இது செயல்படுத்தப்படும் எனவும் அன்றைக்கு அவர்கள் அறிவித்தார்கள்.

இந்தியாவில், தமிழ்நாட்டில் மட்டுமே அனைவருக்குமான பொது விநியோகத் திட்டம் மிகச் சிறப்பான முறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே தெளிவாகச் சொன்னார்கள். தமிழ்நாட்டில் மொத்தம் 1,99,53,681 குடும்ப அட்டைகள் உள்ளன. இதில் 'Antyodaya Anna Yojana' திட்டத்தின்கீழ் உள்ள குடும்ப அட்டைகள் 18,64,600. அதேபோல, முன்னுரிமை பெற்ற குடும்ப அட்டைகள் 77,81,055. முன்னுரிமையற்ற குடும்ப அட்டைகள் 1,03,08,026 என்ற எண்ணிக்கையில் இருக்கிற குடும்ப அட்டைகளுக்கு எல்லாம் விலையில்லாமல் நாம் அரிசியைக் கொடுக்கிறோம். விலை கொடுத்து மத்திய அரசிடமிருந்து வாங்கி, விலையில்லாமல் அரிசி கொடுக்கிறோம்; விலையில்லாமல் கோதுமை கொடுக்கிறோம். தமிழ்நாட்டில் அனைவருக்குமான பொது விநியோகத் திட்டத்தின்கீழ், ஒரு யூனிட் என்று சொல்லப்படுகிற ஒரு நபருக்கு

2019 ஜூலை 2] [திரு. இரா. காமராஜ்]

12 கிலோ அரிசி கொடுக்கப்படுகிறது. அதேபோல ஒரு பெரியவர், ஒரு சிறியவர் என்று சொன்னால், அவர்களுக்கு 14 கிலோ (12+2) அரிசி கொடுக்கப்படுகிறது. 2 பெரியவர்கள் என்று சொன்னால், அவர்களுக்கு 16 (12+4) கிலோ அரிசி கொடுக்கப்படுகிறது. 3 நபர்கள் என்று சொன்னால், அவர்களுக்கு 20 கிலோ அரிசி கொடுக்கப்படுகிறது. மற்ற மாநிலங்களில் தேசிய உணவுப் பாதுகாப்புத் திட்டத்தினை அவர்கள் செயல்படுத்தியதனால், நம்முடைய மாநிலத்தில் கொடுக்கப்படுகிற 12 கிலோ அரிசி, அந்த மாநிலங்களில் எல்லாம் ஒரு நபருக்கு 5 கிலோ அரிசிதான் கொடுக்கப்பட்டு வருகிறது. நம்முடைய மாநிலத்தில் மட்டும்தான் 3 நபர்கள் இருந்தால், அவர்களுக்கு 20 கிலோ அரிசி கொடுக்கப்படுகிறது. மற்ற மாநிலங்களில் 12 கிலோ அரிசிதான் கொடுக்கப்படுகிறது. அதேபோல, 4–க்கும் மேற்பட்ட நபர்கள் இருந்தால், தேசிய உணவுப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ், ஒவ்வொரு நபருக்கும் 5 கிலோ அரிசி கூடுதலாக வழங்கப்படுகிறது. 5 நபர்கள் என்றால், 25 கிலோ அரிசி; 6 நபர்கள் என்றால், 30 கிலோ அரிசி என்கிற வகையிலே தேசிய உணவுப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் வழங்கப்படுகிறது.

நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரை, நாம் அம்மா அவர்களுடைய விலையில்லா அரிசி வழங்கும் திட்டத்தை உட்படுத்திய, அனைவருக்குமான பொது விநியோகத் திட்டத்தின்கீழ் எல்லோருக்கும் உணவுப் பாதுகாப்பினை வழங்கிக் கொண்டிருக்கிறோம். நம்முடைய திட்டத்தையும் செயல்படுத்துகிறோம்; மத்திய அரசினுடைய தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தினையும் செயல்படுத்துகிறோம். இந்த இரண்டு பயன்களையும் அடைகிற ஒரே மாநிலமாக, நம்முடைய தமிழ்நாடுதான் இருக்கிறது என்பதனை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதன்படி, தமிழ்நாட்டில் உள்ள 1,99,53,801 குடும்ப அட்டைதாரர்களுக்கும் சர்க்கரை வழங்கப்படுகிறது.

பிற்பகல் 12–30

ஆனால், பிற மாநிலங்களில் Antyodaya Anna Yojana *திட்டத்தில் பயன்பெறுகிற குடும்பங்களுக்கு மட்டும்தான் சர்க்கரை கொடுக்கிறார்கள். அதுவும் மத்திய அரசு நிர்ணயித்திருக்கின்ற 18 ரூபாய்க்கு ஒரு கார்டுக்கு ஒரு கிலோ வீதம் கொடுக்கிறார்கள். நம்மைப் பொறுத்தவரை, 18 ரூபாய் என்று மத்திய அரசு*

[திரு. இரா. காமராஜ்] [2019 ஜூலை 2

நிர்ணயித்திருந்தாலும் ஒவ்வொரு குடும்ப அட்டைக்கும், மற்ற மாநிலங்களில் 1 கிலோ கொடுத்தாலும், நம்முடைய மாநிலத்தில் நாம் ஒவ்வொரு குடும்ப அட்டைக்கும் 2 கிலோ வீதம் கிலோ 13 ரூபாய் 50 பைசா என்ற விலையில் மானியத்தில் கொடுக்கிறோம். ஒட்டுமொத்தமாக நம்முடைய மாநிலத்தில் இருக்கின்ற குடும்ப அட்டைதாரர்களுக்கும் சர்க்கரையும் மானிய விலையில் வழங்கப்பட்டு வருகிறது. தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் வழங்கப்படாத பல சலுகைகள் நம்முடைய மாநிலத்தில் அனைவருக்குமான பொது விநியோகத் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்டு வருகின்றன என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். வெளி மாநிலத்திலிருந்து வருகிறவர்கள் தமிழ்நாட்டில் நியாய விலைக் கடைகளில் பொருளைப் பெற வேண்டும் என்று சொன்னால், அவர்களுக்கு முன்னுரிமை அட்டைகளுக்கு மட்டும்தான் அத்தியாவசிய பொருட்களை வழங்க முடியும். அதேபோல, அத்தியாவசிய பொருட்களை அவர்களுக்கும் விலையில்லாமல் வழங்க முடிவு செய்தால், அது மாநில அரசுக்கு கூடுதல் செலவினத்தை ஏற்படுத்தும். ஆகவே, பிற மாநிலங்களிலிருந்து வருபவர்களுக்கு வழங்கப்படும் முன்னுரிமை அல்லாத குடும்ப அட்டைகளை எப்பொருளும் வேண்டாத கார்டுகளாகத்தான் நாம் எடுத்துக்கொள்ள வேண்டும். அதேபோல் தற்போதுள்ள நடைமுறைப்படி மற்ற மாநிலங்களிலிருந்து தமிழ்நாட்டிற்கு வந்து ஒரு குடும்ப அட்டை பெற்று, அத்தியாவசிய பொருட்கள் பெறவேண்டும் என்று சொன்னால் அந்த மாநிலத்தில் உள்ள குடும்ப அட்டையை surrender செய்துவிட்டு, அந்த Surrender Certificate—ஐ நம்முடைய மாநிலத்தில் கொண்டுவந்து கொடுத்து அதன்பின்னர், நம்மிடத்தில் குடும்ப அட்டை வேண்டும் என்று மனு செய்து, அதனை நாம் ஆய்வு செய்து குடும்ப அட்டை கொடுத்த பிறகுதான் அவர்களுக்கு பொருட்களை வழங்குகிறோம். இதுதான் தற்போது இருக்கின்ற நடைமுறை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்குறிப்பிட்ட மாறுபட்ட பல்வேறு அம்சங்களை கவனத்தில் எடுத்துக்கொண்டு, அதில் சாதக பாதகங்களை விரிவாக ஆய்வு செய்து, அதே வேளையில் தமிழகத்தில் தற்போது செம்மையாகச் செயல்படுத்தப்பட்டுவரும் அனைவருக்குமான பொது விநியோகத் திட்டத்திற்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாத வகையில்தான், இதில் தமிழக அரசு முடிவெடுக்கும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அவைக்குத் தெரியப்படுத்த விரும்புகிறேன்.

2019 ஜூலை 2] [திரு. இரா. காமராஜ்]

அதுமட்டுமல்லாமல், மாண்புமிகு அம்மா அவர்களின் கனவுத் திட்டமான விலையில்லா அரிசி வழங்கும் திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் எடப்பாடியார் அவர்களின் தலைமையிலான அம்மாவினுடைய அரசு தொடர்ந்து செயல்படுத்தும் என்பதை இப்பேரவையில் உறுதியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

4. மானியக் கோரிக்கைகள், 2019–2020, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

(அ) கோரிக்கை எண் 43-பள்ளிக் கல்வித் துறை

(ஆ) கோரிக்கை எண் 49-இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை

(இ) கோரிக்கை எண் 20—உயர் கல்வித் துறை

(அ) கோரிக்கை எண் 43-பள்ளிக் கல்வித் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2019–2020 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளின்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 43–பள்ளிக் கல்வித் துறை. மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

“பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.28,573,01,21,000/–, மூலதனக் கணக்கில் ரூ.384,31,47,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.29,51,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்”

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 43, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் பழனிவேல் தியாக ராஜன்.*